**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 159/2019**
**Deposition of Witness for : PW 10**

| | |
|---|---|
| **Name** | **:** டாக்டர். செங்கோட்டுவேல் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13-12-2023.**
**(Accused present)**
**முதல் விசாரணை** -

நான் தற்போது நாமக்கல் அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ கல்லூரியில் போதகராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.6.2018 அன்று திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அதே துறையில் பணியில் இருந்த போது மாலை 4 மணிக்கு திருவண்ணாமலை கிராமிய காவல் நிலைய குற்ற எண் 910/2018 வழக்கு தொடர்புடைய தேவேந்திரன் 45 வயது என்பவரின் பிரேத பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளரிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டு சிறப்பு உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் மூலம் அடையாளம் காண்பிக்கப்பட்டு மாலை 4.10 மணிக்கு பிரேத பரிசோதனையை தொடங்கினேன். பிரேத பரிசோதனையில் மரண விறைப்பு தன்மை உடன் முழுவதும் காணப்பட்டது. மேலும் இயல்பான உடல் வாகு இருந்தது.

இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் -

அடர் சிவப்பு சிராய்ப்பு காயங்கள் - 1. 2க்கு 1 செ.மீ அளவில் இடது நெற்றியில், 2. 1க்கு 0.5 செ.மீ அளவில் இடது கண்ணத்தில், 3. 1க்கு 0.5 செ.மீ அளவில் இடது காலின் முன்புறமாகவும், 4. 0.5க்க 0.5 செ.மீ அளவில் இடது தோள் பட்டையின் முன் புறம் காணப்பட்டது. தலைத்தோளை கூராய்வு செய்து பார்த்த போது 10க்கு 5 செ.மீ அளவில் அடர் சிவப்பு கண்ணிய காயம் தலையின் இடது உச்சி மற்றும் பின் தலையில் காணப்பட்டது. இயல்பாக இருந்த மண்டை ஓட்டை கூராய்வு செய்த போது அடர் சிவப்பு subdural என்னும் வகையான ரத்தக்கசிவு மூளையின் இருபுறத்திலும் மற்றும் அனைத்து பகுதியிலும் காணப்பட்டது. அடர் சிவப்பு subarachnoid என்னும்

ரத்தக்கசிவு மூளையின் காது பகுதியில் இருபுறமும் காணப்பட்டது. குறுக்கு வெட்டில் இயல்பாகவும், மூளை உரை மற்றும் மண்டை ஓட்டின் அடிப்பகுதி இயல்பாகவும் காணப்பட்டது.

இருதயம் 450 கிராம் அளவில் சற்று பெரியதாக காணப்பட்டது. அதன் குறுக்கு வெட்டில் அனைத்து அறைகளிலும் திரவ நிலையிலும், உறைந்த நிலையிலும் ரத்தம் காணப்பட்டது. இருதய வால்வுகள் மற்றும் ரத்தக் குழாய்கள் சற்று தடித்தும், கொழுப்பு படிந்தும் காணப்பட்டது. நுரையீரல்கள் இயல்பாகவும், அதன் குறுக்கு வெட்டில் ரத்த செறிவுடன் காணப்பட்டது. வயிற்றில் 150 கிராம் பாதி செரிமானம் செய்யப்பட்ட உணவு பொருட்கள் எந்த வித வாசனையும் இல்லாமல் காணப்பட்டது. அதன் உட்சுவர் இயல்பாக இருந்தது.

தொண்டைகுழி மற்றும் மூச்சுக்குழாய், நாவடி எலும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் இயல்பாக காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாக அளவிலும், அதன் குறுக்கு வெட்டில் ரத்த செரிவுடனும் காணப்பட்டது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. நெஞ்சு எலும்பு, இடுப்பு எலும்பு மற்றும் தண்டுவடம் இயல்பாக இருந்தது. உடல் உள்ளுறுப்புகளை சேகாரம் செய்து ரசாயன பகுப்பாய்விற்கு இருதயத்தை சேகாரம் செய்து திசு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு அன்றைய தினமே மேற்கூறிய நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கலாம் என்று கருத்து போட்டு சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 2,

மேலும், வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட ரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் உடல் உள்ளுறுப்புகளில் எந்த வித நச்சுத் தன்மையோ, மது அருந்தியதற்கான அறிகுறிகளோ இல்லை என்று அளித்த அறிக்கையில் அடிப்படையில் திசு பரிசோதனை செய்யப்பட்டதின் அடிப்படையிலும் மேற்கூறிய நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்க கூடும் என்று சான்று வழங்கினேன். நஞ்சியல் அறிக்கை அ.சா.ஆ.3, என்னுடை இறுதி பகுப்புரை அ.சா.ஆ.4. தடியால் தலையில் தாக்கும் போது மேற்படி காயங்கள் ஏற்பட்டு இறப்பு ஏற்பட வாய்புண்டு. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -**

தம்மிச்சையாக ஒரு நபர் நிலை தடுமாறி ஒரு நபர் கீழே விழும் போது அனைத்து காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை. தடியால் அதிவேகமாக தலையில்

அடிக்கும் போது ரத்தக் கசிவு அதிகமாக ஏற்படுமா என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்து கணிணியில் தட்டச்சு செய்து கையெழுத்து பெற்றார்களா என்றால் போலீசார் வாக்குமூலத்தை கையில் எழுதி கையெழுத்து பெற்றார்கள்.

ஒம்/- செங்கோட்டுவேல்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**<u>SESSIONS CASE NO. 159/2019</u>**
**<u>Deposition of Witness for : PW 11</u>**

**Name** **:** திரு. குமார்
**Father Name** **:**
**Village** **:**
**Taluk** **:**
**Caste** **:**
**Calling** **:**
**Religion** **:**
**Age** **:**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13-12-2023.**
**(Accused present)**

**<u>முதல் விசாரணை</u>** -

நான் தற்போது அசுவநாகசுரனை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் சாட்சி கையெழுத்து போட்ட தனக்கோட்டி இறந்து விட்டார். இறந்த தேவேந்திரம் வீட்டின் அருகே 3 கையெழுத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இரண்டு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். போலீசார் கடந்த 10.6.2018 பகல் 12 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5. மற்றபடி இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.6, இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையெழுத்துக்கள் முறைய அ.சா.ஆ. 7 மற்றும் 8. மேற்சொன்ன கையெழுத்துக்களை போலீசார் போஸ்மார்டம் செய்யும் இடத்தில் வைத்து வாங்கிக் கொண்டார்கள்.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

போலீசார் விசாரணையில் 10.6.2018 தேதி பகல் 12 மணிக்கு சம்பவம் நடந்த இடத்தில் போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் இதில் நானும், தனக்கோட்டி என்பவரும் கையெழுத்து இட்டோம் என்றும், அன்று மாலை 5. 15 மணிக்கு ஐயம்பாளையம் புதூர் பஸ் நிறுத்தத்தில் ஆஜர் எதிரி சங்கர் என்பவரை போலீசார் என் முன்னிலையில் கைது செய்தார்கள் என்றும், அப்போது எதிரி தாமாக முன்வந்து ஒரு

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் நானும், தனகோட்டியும் கையெழுத்து போட்டோம் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சங்கர் தான் மறைத்து வைத்திருந்த பொருட்களை எடுத்து தருவதாக கூறி மாலை 7 மணிக்கு அய்யம்பாளையம் புதூர் பச்சயைப்பன் என்பவரின் ரோஜா தோட்டத்தில் மறைத்து வைத்திருந்த சுமார் 73 செ.மீ நீளமுள்ள மரக்கட்டையை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதனை போலீசார் மகஜரில் கைப்பற்றினார் என்றும், அதில் நானும் தனக்கோட்டியும் கையெழுத்து போட்டோம் என்றும், அதன் பின்னர் இரவு 7.30 மணிக்கு அதே இடத்தில் சுமார் 92 செ.மீ அளவுள்ள மூங்கில் கொம்பை எதிரி எடுத்து கொடுத்ததை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நானும், தனக்கோட்டியும் கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊர் மற்றும் இனம் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

வரைபடத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் எழுதாத வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

ஒம்/- குமார்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.